1994 நவம்பர் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஊ) இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரிவிதிப்பு (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரிவிதிப்பு (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/1994), மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.*

***மாண்புமிகு திரு.கே. ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரிவிதிப்பு (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/1994) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டார் வெஹிகில்ஸ் டேக்சேஷன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுதான் வாய்ப்பு என்று பார்க்கிறீர்களா? (சிரிப்பு)

திரு.சி. ஞானசேகரன்: இது தேவையா என்கிற ஒரு கேள்வியை நான் உங்களிடையே கேட்க விரும்புகிறேன். காரணம், இந்த இடத்தில் ஏற்கனவே ஒரு மோட்டார் வெஹிகளுக்கு வரியைக் கூடுதலாகச் செலுத்திவிட்டால் அதை ரீபண்டு செய்யவேண்டுமென்று சொன்னால்

@ *9.11.1994* ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

கொடுத்து விட்டாலே போகிறது. அதை அட்ஜஸ்ட் செய்வதற்காக ஒரு சட்டத்தை நாம் இங்கே கொண்டுவர வேண்டுமா என்பதை நான் பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ரீபண்டு பண்ண வேண்டிய பணத்தை ரீபண்டு செய்து விட்டால் போகிறது. அதை அட்ஜெஸ்ட் செய்து, இன்னொரு வண்டிக்கு, அல்லது அதே வண்டிக்காக எதிர்காலத்திலே கொண்டு போகிறோம் என்பதற்காக ஒரு சட்டம் தேவையில்லை என்பது என்னுடைய கருத்து. ஆகவே இந்தச் சட்டத்தை வேண்டாம் என்று விட்டு, விட்டு, கொடுக்க வேண்டிய பணத்தை அவர்களுக்குக் கொடுத்துவிடுங்கள். வாங்க வேண்டிய நேரத்தில் வாங்கிக் கொள்ளுங்கள். அதற்காக அட்ஜஸ்ட் செய்ய வேண்டுமா என்பதைத்தான் மீண்டும் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: இதற்கு முன்னாலே இருக்கிற சட்டத்தின் அடிப்படையில் அந்தப் பணத்தை திருப்பிக் கொடுப்பது என்பதும், அதிலே நடைமுறைச் சிக்கல் இருக்கிறது என்பதும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரியும். ஆகவேதான் இந்த நடைமுறைச் சிக்கலைத் தவிர்க்கின்ற வகையிலேதான் வருகின்ற காலாண்டிலோ அல்லது முழு ஆண்டிலோ அந்தப் பணத்தை அட்ஜெஸ்ட் செய்து கொள்ளலாம் என்கிற முறையிலேதான் இந்த பில்லைக் கொண்டு வந்திருக்கிறோம். இது பல்வேறு வாகன உரிமையாளர்கள் வண்டிகளை வைத்து இந்த அரசுக்கு வரிகொடுக்கிற காரணத்தினாலே இதுபோன்ற நடைமுறைச் சிக்கல் இருக்கிறது. அதைத் திருப்பி வாங்குவதற்குக் காலதாமதம் ஏற்படுகிறது என்கிற கருத்தின் அடிப்படையிலேதான் இதை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே, எல்லோரும் ஏற்றுக் கொள்கிற இச்சட்டமுன்வடிவை எல்லோருக்கும் நலமாக இருக்கிற காரணத்தின் அடிப்படையில் இச்சட்டமுன்வடிவை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் ஏற்றுக் கொள்ளலாம். ஆகவே இதை ஏற்றுக் கொண்டு நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

1994 நவம்பர் 10] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரிவிதிப்பு (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1994) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது,

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

(எ) தனியிருப்பிடச் சொத்துரிமைச் சட்டமுன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியிருப்பிடச் சொத்துரிமைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/1994), மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.*

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியிருப்பிடச் சொத்துரிமைச் சட்ட முன்வடிவு @(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/1994) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்",

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

@ 8.11.1994 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.